**<u>சுருக்கம்</u>**

பேரூராட்சிகள் நிர்வாகம் – 2014–15 ஆண்டிற்கான உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் இயக்க மற்றும் பராமரிப்பு இடைவெளிநிரப்பு நிதி தலைப்பின் கீழ் நிதி விடுவிக்க கோருதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ–2) துறை</u>**

அரசாணை (ப) எண்.108 நாள் 19.02.2015

ஜய, மாசி 7, திருவள்ளுவர் ஆண்டு – 2046

**<u>படிக்கப்பட்டது</u>:-**

பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித ந.க.எண்.8194/2014/உ4, நாள்.06.01.2015.

* * * * *

**<u>ஆணை:-</u>**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பேரூராட்சிகளின் இயக்குநர் 2014–2015ம் ஆண்டிற்கான உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி தலைப்பின் கீழ் ரூ.85,38,40,000/–ம், இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி, தலைப்பின் கீழ் ரூ.34,24,61,000/–ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால், பின்வரும் பணிகள் 2014–2015–ம் ஆண்டு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவித்துள்ளார்:-

**<u>உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி</u>**

| வ. எண். | பணியின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | நிதி ஒதுக்கீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| | **ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட பணிகள் (Committed works)** | | | |
| 1. | 2014–15 ஆம் ஆண்டில் திறந்தவெளியில் மலம் கழித்தலை தடுக்கும் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொண்டது (25 சதவீதம் நிதி ஒதுக்கீடு) | 183 | 565.00 | 565.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | **புதிய பணிகள்** | | | |
| 2. | குடிநீர் திட்டம் | 74 | 2005.05 | 1865.46 |
| 3. | சாலைப்பணிகள் | 79 | 2735.50 | 2446.10 |
| 4. | மழைநீர் வடிகால் மற்றும் கல்வெர்ட் | 41 | 1356.50 | 1272.00 |
| 5. | அலுவலகக் கட்டிடம் (அறிவிப்பு பணிகள் உட்பட) | 19 | 939.00 | 883.00 |
| 6. | சமுதாயக் கூடம் (அறிவிப்பு பணிகள் உட்பட) | 8 | 392.00 | 392.00 |
| 7. | பேருந்து நிலையம் மேம்பாடு | 7 | 1034.90 | 1004.90 |
| 8. | வாரச்சந்தை | 1 | 45.00 | 35.00 |
| 9. | நவீன எரிவாயு தகனமேடை | 1 | 100.00 | 75.00 |
| | **மொத்தம்** | **230** | **8607.95** | **7973.46** |
| | **பெருமொத்தம்** | **413** | **9172.95** | **8538.46** |

**<u>இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி</u>**

| வ. எண். | பணியின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | நிதி ஒதுக்கீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | குடிநீர் வழங்கல் திட்டம் | 36 | 1005.00 | 950.00 |
| 2. | சாலை பணிகள் | 51 | 1858.11 | 1677.61 |
| 3. | மழைநீர் வடிகால் மற்றும் கல்வெர்ட் | 16 | 540.50 | 504.00 |
| 4. | அலுவலகக் கட்டிடம் | 2 | 35.00 | 35.00 |
| 5. | சமுதாயக் கூடம் | 1 | 25.00 | 25.00 |
| 6. | பேருந்து நிலைய மேம்பாடு | 5 | 233.00 | 233.00 |
| | **மொத்தம்** | **111** | **3696.61** | **3424.61** |

2. மேலும், மேற்கண்ட உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதிக்கான திட்டங்கள், அதற்கான மதிப்பீடுகள், பொதுக்குழுவினால் (Common Committee) 05.12.2014–ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து, 2014 – 2015–ம் ஆண்டிற்கு, உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி தலைப்பின் கீழ் ரூ.85,38,46,000/–ம் மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி தலைப்பின் கீழ் ரூ.34,24,61,000/–ம் விடுவிக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேற்படி பேரூராட்சிகளின் இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசிலனை செய்து 2014–2015ம் ஆண்டில், உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி தலைப்பின் கீழ் ரூ.62,11,63,000/–ம் மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி தலைப்பின் கீழ் ரூ.26,62,13,000/–ம் மேலே பத்தி 1-ல் கூறிய பணிகளை மேற்கொள்ள ஏதுவாக, நிதி விடுவித்து அரசு ஆணை வெளியிடுகிறது.

4. மேற்காணும் தொகையினை பெற்று வழங்க பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுமதி மற்றும் அதிகாரம் அளித்து அரசு மேலும் ஆணையிடுகிறது.

5. மேற்படி செலவினங்கள் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படும்:-

**1) உள் கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி தொகைரூ.62,11,63,000/–**

"3604–00 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் – 193 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் – அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி – I திட்டத்தில் சேராதது – AC அடிப்படைக் கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை 09 உதவித் தொகை 02 மூலதன சொத்து உருவாக்குவதற்கான உதவித் தொகை'' (DPC.3604 00 193 AC 0923)

**2) இயக்க மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பு நிதி தொகை ரூ.26,62,13,000/–**

''3604–00 உள்ளாட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்–193 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி–I திட்டத்தில் சேராதது – AD இயக்க மற்றும் பராமரிப்பு நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை–09 உதவித்தொகை – 02 மூலதன சொத்து உருவாக்குவதற்கான உதவித் தொகை (DPC 3604-00-193-AD-0921)"

6.மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட நிதியினை பெற்று தமிழ்நாடுஅடிப்படை வளர்ச்சி மற்றும் புதுப்பிக்கும் நிதியின் (PD A/c No.01G03099750BQ) பொது வைப்புக் கணக்கில் வரவு வைத்திடவும், ஆயினும் இந்நிதியினைக் கையாண்டு வரும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அடிப்படை

கட்டமைப்பு வசதிக்கான நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை ஆகியவற்றைக் பொதுக்குழுவின் முடிவிற்கேற்ப அரசின் அறிவுறுத்தல் பெற்றபின்னரே விடுவிக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அனுமதிக்கப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.3634/15, நாள் 13.01.2015–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. பணீந்திர ரெட்டி,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்**
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை –108.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை –1.
மாநில கணக்காயர், சென்னை –9/18.
**நகல்**
செயலரின் தனிச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை –108.
நிதி (ந.நி (ம) கு.வ./நிகு–IV / வழிவகை மற்றும் கடன்கள் ) துறை,சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.2 / பட்ஜெட்) துறை, சென்னை – 9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

**பிரிவு அலுவலர்**